# இரண்டு வசனங்களுக்கு இடையில் இடைவெளி இருக்கின்றதா?

**வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

சிருஷ்டிப்பின் சரிதையை அறியத்தரும் ஆதியாகமம் முதலாம் அதிகாரம் தற்காலத்தில் பல விதமான முறைகளில் வியாக்கியானம் செய்யப்பட்டு வருகின்றது.[1] ஏனெனில், தற்காலத்தில் பெரும்பாலானவர்கள் விஞ்ஞானக் கோட்பாடுகளே உண்மை என்று நம்புவதினால், இதற்கேற்ற விதமாக வேதாகமத்தையும் வியாக்கியானம் செய்து வருகின்றனர். இதனால், உலகம் உருவாகி இன்றைய நிலையை அடைவதற்கு கோடிக்கணக்கான யுகங்கள் அகியுள்ளன என்னும் விஞ்ஞானக் கருத்தின் பாதிப்புக்கு உட்பட்டவர்களாக, ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் நீண்ட கால இடைவெளி இருக்கின்றது என்று பலர் போதிக்கின்றனர். தற்காலத்தில் சாதாரண கிறிஸ்தவர்களும் இத்தகைய கருத்துடையவர்களாக இருப்பதினால், இத்தகைய போதனை எதினால் எக்காலத்தில் உருவானது? என்பதையும், இதில் ஏதாவது உண்மை இருக்கின்றதா? என்பதையும் இக்கட்டுரையில் ஆராய்ந்து பார்ப்போம்.

உலகமும் உயிரினங்களும் உருவாகி கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன என்னும் விஞ்ஞானக் கோட்பாட்டை ஆதரிப்பவர்களில் சிலர், தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் செயலை ஆரம்பிக்கும்போது பூமி எப்படி இருந்தது என்றே இரண்டாம் வசனம் கூறுகிறது என்று வாதிட்டாலும்,[2] ஏனையவர்கள், தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பூமிக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றியே இரண்டாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் போதிக்கின்றனர். ஏனெனில் "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது" (ஆதி.1:2) என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதினால், தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பூமிக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றியே இவ்வசனம் அறியத்தருவதாக இவர்கள் கூறுகின்றனர். தற்கால கிறிஸ்தவ உலகில் ஓரளவு பிரபலமடைந்துள்ள இப்போதனை, "இடைவெளிக் கோட்பாடு" (Gap Theory) என்றும் "உருவழிந்து மறுபடியும் உருவாக்கப்படுதல் கோட்பாடு" என்றும் (Ruin and Reconstruction Theory) அழைக்கப்படுகின்றது. ஆனால் இக்கோட்பாடு, ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் நீண்ட கால இடைவெளி இருப்பதாகக் கூறுகிறது.[3]

ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் கால இடைவெளி இருக்கின்றது என்று போதிப்பவர்கள், முதலாம் வசனம் தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்பைப் பற்றியும், இரண்டாம் வசனம் தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்புக்கு ஏற்பட்ட பாதிப்பின் விளைவைப் பற்றியும் அறியத்தருவதாகவும், இவ்விரு வசனங்களுக்கும் இடையில் பிசாசின் வீழ்ச்சி ஏற்பட்டதென்றும், இதனாலேயே பூமி பாதிக்கப்பட்டு இரண்டாம் வசனம் கூறுவதுபோல "ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது" என்றும் கூறுகின்றனர். எனினும், ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் நீண்ட கால இடைவெளி இருக்கின்றது என்னும் விளக்கம், முதல் தடவையாக, ஸ்காட்லாந்து நாட்டின் பிரஸ்பிட்டேரியன் சபையைச் சேர்ந்த "தோமஸ் சாள்மர்" (Thomas Chalmers 1780-1847) என்னும் போதகரினால் 1814ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.[4] ஆனாலும், "இது இறையியல் காரணங்களுக்காக அல்ல, அக்கால புவியியல் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளின் பிரபல்யத்தின் நிமித்தம் உருவாக்கப்பட்ட ஒரு விளக்கமாகவே உள்ளது."[5] அதாவது, 19ஆம் நூற்றாண்டு புவியியல் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளை வேதாகமத்திற்குள்

---

[1] இவற்றை முழுமையாக அறிந்துகொள்வதற்கு விரைவில் வெளிவரும் எனது "சிருஷ்டிப்பின் சரிதையும் சத்தியங்களும்" என்னும் நூலைப் பார்க்கவும்.
[2] இவர்கள் சடப்பொருள் ஏற்கனவே இருந்தது என்றே கருதுகின்றனர்.
[3] A.C.Custance, *Without form and Void*, pp. 10-40.
[4] T.Taylor, *In the Minds of Men: Darwin and the New World*, p. 363; F.C.Haber, *The Age of the World: Moses to Darwin*, pp. 201-204.
[5] W.W.Fields, *Unformed and Unfilled: A Critique of the Gap Theory*, p. 40-41.

புகுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு விளக்கமாக,[6] அக்கண்டுபிடிப்புகளுக்கு ஏற்றவிதத்தில் ஆதியாகம சிருஷ்டிப்பின் சரிதையை வியாக்கியானம் செய்யும் ஒரு விளக்கமாகவே உள்ளது.[7] இதனால்தான், "உலகத்தின் தோற்றத்தைப்பற்றிய விஞ்ஞானக் கோட்பாட்டின்படியான கோடிக்கணக்கான யுகங்களை ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் கொண்டுவரும்போது, விஞ்ஞானத்திற்கும் ஆதியாகமத்திற்கும் இடையில் இருப்பதாகக் கூறப்படும் முரண்பாடு இல்லாமல் போகிறது"[8] என்று இவர்கள் கூறுகின்றனர்.[9]

நாம் வாழும் பூமி கோடிக்கணக்கான ஆண்டுகள் பழமையானது என்னும் விஞ்ஞானக் கருத்துடன் ஆதியாகம சிருஷ்டிப்பின் சரிதையை ஒத்துப்போக வைப்பதற்காக, அதாவது பூமி கோடிக்கணக்கான ஆண்டுகள் பழமையானது என்றே வேதாகமமும் கூறுகின்றது என்று காண்பிப்பதற்காகவே தோமஸ் சாள்மர் ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதலிரு வசனங்களுக்கும் இடையில் நீண்டகால இடைவெளி இருக்கின்றது என்னும் தவறான ஒரு போதனையை உருவாக்கி, அக்காலத்திலேயே புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுவது போன்ற மாற்றங்கள் பூமியில் ஏற்பட்டன என்று கூறினார்.[10] இதனால், பூமியைப்பற்றிய விஞ்ஞானக் கருத்துகளுக்கு ஏற்றவிதத்தில் வேதாகமத்தைப் போதிப்பதற்கு, ஆதியாகம சிருஷ்டிப்பின் சரிதையில் நீண்டகால யுகங்களை உருவாக்குவதே சிறந்த வழி என்று அக்காலத்தில் கருதப்பட்டது.[11] எனவே, விஞ்ஞானக் கருத்துகளுக்கு ஏற்றவிதத்தில் வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு போதனையாகவே "இடைவெளிக் கோட்பாடு" உள்ளது.

தோமஸ் சாள்மரின் கருத்துகள், 1876ஆம் ஆண்டு "ஜோர்ஜ் பெம்பர்" என்பவர் எழுதிய "புவியின் ஆரம்பகால யுகங்கள்" என்னும் நூலில் விரிவுபடுத்தப்பட்டபோது, "ஆதியாகமம் முதல் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் எவ்வளவு நீண்ட காலத்தையும் கொண்டுவரலாம்"[12] என்றும், தேவன் ஒன்றுமில்லாததிலிருந்து உலகத்தை சிருஷ்டித்தார் என்று அதுவரை காலமும் போதிக்கப்பட்டு வந்த வேதாகம சத்தியம் பிறமதங்களிலிருந்து வந்துள்ளது என்றும் விளக்கப்பட்டது.[13] ஆனால், சாத்தானினதும் அவனைச் சேர்ந்த பிசாசுகளினதும் வீழ்ச்சி ஆதியாகமம் 1:1இற்கும் 1:2இற்கும் இடையில் ஏற்பட்டது என்னும் இவர்களுடைய போதனையே "நொஸ்டிசம்" (Gnosticism) மற்றும் "மெனிக்கியனிசம்" (Manicheanism) என்னும் வேதப்புரட்டு உபதேசங்களிலிருந்து வந்துள்ளது.[14] மேலும், 19ஆம் நூற்றாண்டின் புவியியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளுக்கு ஏற்றவிதத்தில் உருவாக்கப்பட்டுள்ள இடைவெளிக் கோட்பாடு, 1917ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளிவந்த "ஸ்கோ.ஃபீல்ட்"[15] மற்றும் 1961ம் ஆண்டு வெளியிடப்பட்ட "டேக்ஸ்" என்னும் வேதாகமக் குறிப்புகளில் சேர்க்கப்பட்டதினால், "மனிதர்களினால் உருவாக்கப்பட்ட இத்தவறான கருத்து, ஒரு தலைமுறைக் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக மாறிவிட்டது. ஆனால் வேதாகமத்தில் இத்தகைய கருத்துக்கு எவ்வித இடமுமில்லை."[16] எனவே, "விஞ்ஞானத்துடன் வேதாகமத்தை ஒத்துப்போக வைப்பதற்காக கி.பி.19ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இத் தவறான கருத்து ஸ்கோபீல்ட் வேதாகமத்தின் விளக்கக் குறிப்புகளில் சேர்க்கப்படாமல் இருந்திருந்தால், பெரும்பாலான கிறிஸ்தவர்கள்

---

[6] H.Blocher, *In the Beginning: The Opening Chapters of Genesis*, p. 41.
[7] K.Hamm, ed., *The New Answers Book: Over 25 Questions on Creation/Evolution and the Bible*, p. 62; W.E.Lammerts, ed., *Scientific Studies in Special Creation*, p. 32; R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, p. 50; H.Miller, *The Testimony of the Rocks*, p. 143.
[8] F.H.Dake, *Dakes Annotated Reference Bible*, p. 51.
[9] T.Chalmers, *On Natural Theology*, pp. 250-51.
[10] W.Hanna, ed., *Select Works of Thomas Chalmers*, pp. 146-150.
[11] J.H.Kurtz, *History of the Old Covenant Volume 1*, p. cxiii.
[12] G.H.Pember, *Earth's Earliest Age*, p. 28.
[13] G.H.Pember, *Earth's Earliest Age*, p. 20.
[14] O.Zockler, "Creation and Preservation" in *New Schaff-Herzog Encyclopaedia of Religious Knowledge Volume 3*, p. 302.
[15] *The New Scofield Reference Bible*, pp. 1, 752-753.
[16] R.C.Sproul, *Truths We Confess: A Layman's Guide to the Westminster Confession of Faith*, p. 123.

இத்தவறான போதனையை உண்மை என்று ஏற்றுக்கொண்டிருக்கும் துரதிஷ்டமான நிலைமை தற்காலத்தில் ஏற்பட்டிருக்காது.”[17]

ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் நீண்ட கால இடைவெளி இருக்கின்றது என்று போதிப்பவர்கள் தமது கருத்தை நிரூபிப்பதற்காக இரண்டாம் வசனத்திலுள்ள “இருந்தது” என்னும் சொல்லை “ஆகியது” என்று மாற்றியுள்ளனர்.[18] ஸ்கோ.ஃ.பீல்ட் ஆங்கில வேதாகமத்திலும் இத்தகைய மொழிபெயர்ப்பு மாற்றம் உள்ளது. எனினும் பழைய ஏற்பாட்டின் மூலமொழியான எபிரெய மொழி இலக்கணத்தின்படி இவ்வசனத்தில் உள்ள “இருந்தது” என்னும் சொல்லை “ஆகியது” என்று எவ்விதத்திலும் மொழிபெயர்க்க முடியாது. ஏனெனில், இலக்கணரீதியாக “இருந்தது” என்பதே சரியான மொழிபெயர்ப்பாகும்.[19] இதற்குக் காரணம், இருந்தது என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள “ஹய்யிட்டா” (*hayeta*) என்னும் எபிரெயச் சொல் அம்மொழி இலக்கணத்தின்படி qal stemஇல் perfect verbஆக இருப்பதேயாகும்.[20] இதனால், இரண்டாம் வசனத்திலுள்ள “இருந்தது” என்னும் சொல், முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூமி ஆரம்பத்தில், அதாவது, தேவன் பூமியை சிருஷ்டித்தபோது எத்தகைய நிலையில் இருந்தது என்பதையே அறியத்தருகின்றது.[21] எனவே, இதை பூமிக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் பாதிப்பின் விளைவை விளக்கும் விதத்தில் “ஆகியது”” என்று எவ்விதத்திலும் மாற்றமுடியாது.[22] இதனால், இடைவெளிக் கோட்பாடு, வேதவசனத்தையே மாற்றி மொழிபெயர்த்து உருவாக்கப்பட்ட ஒரு தவறான போதனையாகவே உள்ளது.

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின் இரண்டாம் வசனம் தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஏற்பட்ட பாதிப்பைப்பற்றிய விவரணம் அல்ல என்றால், தேவன் படைத்த பூமி ஏன் ஒழுங்கற்றும் வெறுமையுமாய் இருந்தது? என்று நாம் கேட்கலாம். இதற்கு, இவ்விரு சொற்களினதும் சரியான அர்த்தத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். உண்மையில், தேவன் பூமியைச் சிருஷ்டித்த போது, அதாவது, பூமியை அவர் சிருஷ்டித்த நாளில் பூமியானது முழுமையாகத் தண்ணீருக்குள் இருந்ததோடு,[23] இப்போது இருக்கும் ஒழுங்குமுறை பூமியில் இருக்கவில்லை. அதாவது, மலைகள் பள்ளத்தாக்குகள் நிலப்பரப்பு சமுத்திரம் நதிகள் என்பன முதல் நாளில் இருக்கவில்லை. இவை, ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவனுடைய ஆறு நாட்களின் சிருஷ்டிப்புச் செயல்களினால் ஏற்பட்டதாகும். இதனால், இவைகள் இல்லாத நிலையே ஆதியாகமம் 1:2இல் பூமியானது ஒழுங்கில்லாமல் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. [24] மேலும், முதல் நாளில் பூமியில் தாவரங்கள், பறவைகள், மிருகங்கள், மனிதர் என்று எதுவும் இல்லாமல் பூமி வெறுமையாயுமிருந்தது.[25] அதாவது, எவ்வித குடியிருப்பும்

[17] W.Fields, *Unformed and Unfilled: A Critique of the Gap Theory*, p. 43.

[18] A.C.Custannce, *Without Form and Void*, pp. 41-42; A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, pp. 37-38; J.S.Baxter, *Explore the Book Volume 1*, p. 35.

[19] K.A.Mathews, *Genesis: The New American Commentary*, p. 139; C.J.Collins, *Genesis 1-4: A Linguistic, Literary, and Theological Commentary*, p. 128; H.Blocher, *In the Beginning: The Opening Chapters of Genesis*, p. 43; J.Coleson, *Genesis 1-11: New Beacon Bible Commentary*, p. 44; D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 44; D.Batten, ed., *The Creation Answers Book*, p. 59; R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, p. 55.

[20] எபிரெய மொழியில் வினைச் சொற்கள் அவற்றின் வகைகளையும் (அதாவது, செய்வினை, செயப்பாட்டு வினை) செயல்பாட்டின் காலத்தையும் அறியத்தரும் விதத்தில் எழுதப்படுவது வழக்கம்.

[21] J.Calvin, *A Commentary on Genesis*, p. 69-70.

[22] J.H.Walton, *Genesis: The NIV Application Commentary*, p. 72; B.K.Waltke, *Creation and Chaos*, p. 19; G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 15; H.Morris, *The Beginning of the World: A Scientific Study of Genesis 1-11*, p. 15; W.C.Kaiser, *Though Questions about God and His Actions in the Old Testament*, p. 63.

[23] மூன்றாம் நாளிலேயே தண்ணீருக்குள் இருந்த பூமியில் வெட்டாந்தரை தென்படும் விதத்தில் தேவன் தண்ணீரை ஒருபுறமாகத் தள்ளினார் என்பதை ஆதியாகமம் 1:9-10 அறியத்தருகின்றது.

[24] K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, pp. 135-137; J.Calvin, *Genesis: The Geneva Series of Commentarries*, p. 70; M.Luther, p. 27; C.F.Keil & F.Delitzsch, *Commentary on the Old Testament Volume 1*, p. 29; H.M Morris, *The Genesis Record*, pp. 40-41; J.H.Sailhamer, *Genesis: The Expositor's Bible Commentary Volume 1*, p. 26; A.E.Steinmann, *Genesis: Tyndale Old Testament Commentary*, pp. 50-51; R.D.Skinner, *Studies in Genesis: A Creative Commentary*, p. 66.

[25] C.Ch.Aalders, *Genesis Volume 1: Bible Student's Commentary*, p. 54. சில பிரசங்கிகள் கூறுகின்ற விதமாக ஆதியாகமம் 1:1ஐ ஏசாயா 45:18 முரண்படுத்தவில்லை. இவ்வசனத்தில் “வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின

இல்லாத நிலையில் பூமி இருந்தது.[26] எனினும், சிருஷ்டிப்பின் முதல் நாளில் பூமியானது ஒழுங்கற்றும் வெறுமையுமாய் இருந்தாலும், இவ்விதமாகவே தேவனிடமிருந்து வந்துள்ளது.[27] ஏனெனில், தேவன் பூமியைச் சிருஷ்டித்த முதல் நாளில் பூமி எப்படி இருந்தது என்பதைப்பற்றியே இரண்டாம் வசனம் கூறுகிறது.[28] எனவே, பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது என்னும் வாக்கியம், தேவனுடைய ஆறு நாட்களின் சிருஷ்டிப்பு செயல்களுக்கு முன்பாக, முதலாவது நாளில் தேவன் பூமியைச் சிருஷ்டித்தபோது பூமி இருந்த அதன் ஆரம்ப நிலையைப் பற்றிய விவரணமாய் இருக்கின்றதே தவிர, அழிவினால் ஏற்பட்ட பாதிப்பைப்பற்றிய குறிப்பு அல்ல.[29]

ஆதியாகமம் முதலாம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் இடைவெளி இருக்கின்றது என்று போதிப்பதற்காக, இத்தகைய அர்த்தத்தைத் தரும் விதத்தில் இவ்விரு வசனங்களையும் தனித்தனியாக மொழிபெயர்ப்பதும் தவறாகும். ஏனெனில், மூலமொழியில் இவ்விரு வசனங்களும் "வாவ்" (*waw*) என்னும் சொல்லினால் இணைக்கப்பட்டுள்ளன. அதாவது, எவ்விதத்திலும் ஒரு இடைவெளியை ஏற்படுத்த முடியாத விதத்தில் இவ்விரு வசனங்களும் இலக்கணரீதியாக இணைக்கப்பட்டுள்ளன.[30] இதனால், உண்மையிலேயே இவ்விரு வசனங்களுக்கும் இடையில் இடைவெளி இருக்கும் என்றால் இத்தகைய இலக்கண முறையில் இவ்வசனம் எழுதப்பட்டிருக்காது.[31] எனவே, இது முதலாம் வசனத்தில் இருக்கும் பூமிக்கு என்ன நடந்தது என்பதை அல்ல, முதலாம் வசனத்தில் சிருஷ்டிக்கப்பட்ட பூமி எப்படி இருந்தது என்பதையே அறியத்தருகின்றது.[32] எனவே, இதை இரண்டு வாக்கியங்களாக மொழிபெயர்ப்பதும்

---

தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை" என்று இவ்வசனத்தில் தேவன் தெரிவித்துள்ளார். அதாவது, "பூமியை வெறுமையாயிருக்கச் சிருஷ்டிக்கவில்லை" என்று தேவன் இவ்வசனத்தில் கூறுவதனால், ஆதியாகமம் 1:1ல் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பூமி வெறுமையாயிருந்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு முரண்பாடுபோலவே நமக்குத் தென்படுகின்றது. எனினும், பூமியைச் சிருஷ்டித்ததில் தேவனுக்கு இருந்த நோக்கமே ஏசாயா 45:18ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆதியாகமம் 1:1ல் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பூமி முதல் நாளில் எப்படி இருந்தது என்பதையே அறியத்தருகின்றது. உண்மையில், ஏசாயா 45:18ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய நோக்கம், ஆறு நாட்களாக செய்யப்பட்ட அவருடைய சிருஷ்டிப்புச் செயல்களில் நிறைவேறியுள்ளதை ஆதியாகமம் முதலாம் அதிகாரம் அறியத்தருகின்றது (J.P.Lange, *Genesis: Lange's Commentary on the Holy Scriptures*, p. 499; Zondervan 1978; E.J.Young, "The Interpretation of Genesis 1:2" in *Westminster Theological Journal* 23 (1960-1961), p. 154; R.N.Whybry, *Isaiah 40-66: New Centuary Bible*, pp. 110-111; W.W.Fields, *Unformed and Unfilled: A Critique of the Gap Theory*, pp, 123-124; D.T.Tsumura, *The Earth and the Waters in Genesis 1 and 2*, pp. 33-34; K.Hem, ed., *The New Answers Book: Over 25 Questions on Creation/Evolution and the Bible,* pp. 60-61; W.E.Lammerts, ed., *Scientific Studies in Special Creation*, p. 35. எரேமியா 4:23ல் "பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது" என்று தீர்க்கதரிசி குறிப்பிட்டுள்ளார். இச்சொற்பிரயோகம் தேவதண்டனையையைப்பற்றிய ஒரு அறிவிப்பாக இருப்பதனால், ஆதியாகமம் 1:2லும் இச்சொற்பிரயோகம் தேவதண்டனையினால் பூமிக்கு ஏற்பட்ட நிலையைப்பற்றியே கூறுவதாகச் சிலர் கருதுகின்றனர். (A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p.38). ஆனால், எரேமியா யூதேயாவின் அழிவைப்பற்றிக் கண்ட தரிசனத்தைக் குறிப்பிட்டுள்ளாரே தவிர, பூமியின் ஆரம்பநிலையைப்பற்றி அவர் தரிசனம் காணவில்லை என்பதை இவ்வசனம் இடம்பெறும் பகுதியை முழுமையாகப் பார்த்தால் அறிந்துகொள்ளலாம் (F.B.Huey, *Jeremiah: Bible Study Commentary*, p. 31; T.H.Epp, *The God of Creation Volume 1*, p. 47). உண்மையில், ஏசாயாவும் எரேமியாவும், தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்பை விளக்குகிறவர்களாக அல்ல, அவர்கள் தீர்க்கதரிசனமுரைக்கும் நாடுகளுக்கு ஏற்படப்போகும் நிலையைப் பற்றியே விபரித்துள்ளனர் (R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, pp. 58-59).

[26] J.C.Whitcomb, *The Early Earth*, pp. 123-124. Baker 1972; J.H.Sailhamer, *Genesis: The Expositor's Bible Commentary Volume 2*, p. 24.

[27] D.Bonhoeffer, *Creation and Fall: Two Biblical Studies*, p. 19; E.J.Young, *In the Beginning: Genesis 1-3 and the Authority of Scripture*, pp. 29-30; D.Atkinson, *The Message of Genesis 1-11: The Bible Speaks Today Commentary*, p. 24.

[28] H.C.Leupold, *Exposition of Genesis Volume* 1, pp. 46-47; K.Hem, ed., *The New Answers Book: Over 25 Questions on Creation/Evolution and the Bible,* p. 60; R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, p. 50.

[29] B.Waltke, "The Creation Account in Genesis 1:1-3" in *Bibliotheca Sacra*. 132 (1975), pp. 225-228; C.F.Keil & F.Delitzsch, *Commentary on the Old Testament Volume 1*, pp. 29-30; H.Morris, *The Beginning of the World: A Scientific Study of Genesis 1-11*, p. 16; J.W.Watts, *A Survey of Old Testament Teachings Volume 1*, pp. 16-17; B.F.C.Atkinson, *The Pocket Commentary of the Bible*, p. 12.

[30] J.C.Laney, *Answers to Tough Questions: A Survey of Problem Passages and Issues*, p. 15.

[31] F.F.Bruce, "And the Earth Was Without Form and Void: An Enquiry into the Exact Meaning of Genesis 1:2" in *Journal of the Transactions of the Victoria Institute*. 78 (1946), p. 21; K.Hem, ed., *The New Answers Book: Over 25 Questions on Creation/Evolution and the Bible,* p. 59. n

[32] E.Kautzsch & A.E.Cowley, *Gesenius's Hebrew Grammar*, p. 453; W.E.Lammerts, ed., *Scientific Studies in Special Creation*, p. 34; H.M.Morris, *Genesis Record: A Scientific & Devotional Commentary on the Book of Beginnings*, p. 48; R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, p. 56.

தவறாகும். ஏனெனில், மூலமொழியில் இவ்விரு வசனங்களும் தனியான ஒரு வாக்கியமாகவே உள்ளது.

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின் முதலிரு வசங்களும் மூலமொழியில் தனியொரு வாக்கியமாக இருப்பதினால், ஆங்கிலத்தில் NRSV மொழிபெயர்ப்பு முதலாம் வசனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்காமல் அரைப்புள்ளியிட்டு, இரண்டாம் வசனத்தை முதல் வசனத்தின் தொடர்ச்சியாகச் சரியாக மொழிபெயர்த்துள்ளது.[33] சில ஆங்கில வேதாகமங்களில் இவை இரண்டு வசனங்களாக உள்ளபோதிலும், மூலமொழியின் இலக்கண அமைப்புக்கு ஏற்ற விதத்தில், இரண்டாம் வசனத்தை "இருந்தது" என்று இறந்த காலத்தில் முடிவடையும் விதத்தில் குறிப்பிட்டு, தேவன் முதல் நாளில் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோது பூமி எப்படி இருந்தது என்பதை அறியத்தரும் விதத்தில் And the earth was என்று ஆரம்பிக்கின்றது.[34] ஆனால், தமிழில் திருவிவிலியத்தில், மூலமொழிக்கு ஏற்ற விதத்தில் இரண்டு வசனங்களும் தனியான ஒரு வாக்கியமாக "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது" என்று சரியாக இவ்வசனங்களைக் குறிப்பிட்டுள்ளது. எனவே, தேவன் முதல் நாளில் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த போது, பூமி எப்படி இருந்தது என்பதையே இரண்டாம் வசனம் அறியத்தருகிறது.[35] ஏனெனில், "ஆறு நாட்களாக பூமியில் உருவாக்க வேண்டியவற்றைச் செய்வதற்குத் தேவையான மூலப்பொருளையே தேவன் முதல் நாளில் சிருஷ்டித்துள்ளார்."[36] இதனால், முதல் நாளில் பூமி எதுவும் உருவாக்கப்படாத நிலையில் எதுவும் இல்லாமல் இருந்தது என்பதையே ஒழுங்கின்மை வெறுமை என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொற்கள் அறியத்தருகின்றன.[37]

ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதலிரு வசனங்களுக்கும் இடையில் நீண்டகால இடைவெளி இருக்கின்றது என்று கூறுபவர்கள், தேவன் ஆரம்பத்தில் பூரணமான பரலோகத்தையும் பூமியையும் சிருஷ்டித்திருந்தார் என்றும், அக்காலத்தில் சாத்தான் ஏதேன் என்னும் தோட்டத்தில் இருந்து ஆதாமுக்கு முற்பட்ட கால மக்களை ஆண்டுவந்தான் என்றும், அவன் தேவனைப்போல ஆகவேண்டும் என்று எண்ணி அவருக்கு எதிராகக் கலகம் செய்தான் என்றும், இதனால் தேவதண்டனை ஜலப்பிரளயமாக பூமியில் ஏற்பட்டு, பூமியின் தாவரங்கள், உயிரினங்கள் அனைத்தும் அழிந்துவிட்டன என்றும், இத்தகைய நிலையில் உள்ள பூமியைப்பற்றியே ஆதியாகமம் 1:2 கூறுகிறது என்றும் விளக்குகின்றனர்.[38] ஆனால், இத்தகைய விளக்கங்களுக்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. அதாவது, "தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்புக்கும் அதன் பின்பான சிருஷ்டிப்புக்கும் இடைப்பட்ட காலத்திலேயே சாத்தானின் வீழ்ச்சி நடைபெற்றது என்று வேதாகமத்தில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை."[39] உண்மையில், சாத்தானதும் அவனைச் சேர்ந்த பிசாசுகளினதும் வீழ்ச்சிபற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் (யூதா.1:6, 2பேது.2:4)[40] இச்சம்பவம் நடைபெற்ற காலத்தையும், இது எப்படி நடைபெற்றது என்பதையும் வேதாகமம் நமக்கு அறியத்தரவில்லை. மேலும், கி.பி.4ஆம் நூற்றாண்டிலிருந்து ஏசாயாவிலும் எசேக்கியேலிலும் சாத்தானின் வீழ்ச்சியைப்பற்றி குறிப்பிட்டுள்ளதாகச்

---

[33] In the beginning when God created the heavens and the earth, the earth was a formless void என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[34] B.K.Waltke & M.O'Connor, *Introduction to Biblical Hebrew Syntax*, pp. 8.3b, 39.2.3.

[35] J.Pelikan, ed., *M.Luther's Work Volume 1*, p. 6; J.Calvin, *Genesis: The Geneva Series of Commentaries*, p. 70; Keil & Delitzsch, p. 49; W.Fields, *Unformed and Unfilled: A Critique of the Gap Theory*, pp. 83-84; D.F.Payne, "Approaches to Genesis 1.2" in *Transactions*. 23 (1969-1970), p. 66.

[36] J.MacKeown, *Genesis: The Two Horizons Old Testament Commentary*, p. 21; J.Coleson, *Genesis 1-11: New Beacon Bible Commentary*, p. 42.

[37] D.Tsumura, *The Earth and the Waters in Genesis 1 and 2: A Linguistic Investigation*, pp. 41-43.

[38] W.Fields, *Unformed and Unfilled: A Critique of the Gap Theory*, p. 7; G.H.Pember, *Earth's Earliest Ages*, p. 36; E.Sauer, *The Dawn of World Redemption*, p. 35; E.Sauer, *From Eternity to Eternity*, p. 18. Eerdmans, 1957.

[39] J.S.Feinberg, *No One Like Him: The Doctrine of God*, p. 587.

[40] யூதா 1:6இல் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்" என்றும், 2பேதுரு 2:4இல், "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்துள்ளார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுட்டிக்காட்டப்படும் பகுதிகள், அதாவது ஏசாயா 14:12-15 எசேக்கியேல் 28:12-15 என்னும் வசனங்கள், தீரு மற்றும் பாபிலோனிய அரசர்களைப்பற்றிய தீர்க்கதரிசனமாக இருப்பதை, இவற்றின் ஆரம்ப வசனங்கள் அறியத்தருகின்றன (ஏசா.14:4, எசே.28:2).[41] அது மாத்திரமல்ல, இத்தீர்க்கதரிசிகளுடைய காலத்திற்கும் முன்பே சாத்தானின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதினால், எதிர்காலத்தில் நடைபெறப் போகும் காரியங்களை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசிகள், ஏற்கனவே நீண்ட காலத்திற்கும் முன்பே நடைபெற்ற காரியத்தைப்பற்றி அறிவிக்கிறார்கள் என்று கூற முடியாது. அதேசமயம், சாத்தானின் வீழ்ச்சியை ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் திணிப்பதும் தவறாகும். ஏனெனில், இவ்விடத்திலேயே சாத்தானின் வீழ்ச்சி நடைபெற்றது என்று இவ்வசனங்களில் குறிப்பிடப்படவில்லை.

சாத்தானின் வீழ்ச்சியினாலேயே பூமி பாதிக்கப்பட்டது என்பதற்கும் வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.[42] உண்மையில், மனிதனுடைய வீழ்ச்சியினாலேயே பூமி பாதிக்கப்பட்டது (ஆதி.3:17-18). மேலும், ஆதாமுக்கும் முற்பட்ட மனிதர்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆரம்ப உலகத்தில் இருந்தார்கள் என்னும் விளக்கம், ஆதாமே உலகின் முதல் மனிதன் என்னும் வேதாகமப் போதனையை முரண்படுத்துவதாய் உள்ளது. ஆதியாகமம் முதலாம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் கால இடைவெளி இருக்கின்றது என்னும் கருத்து கி.பி.19ஆம் நூற்றாண்டு புவியியல் கல்வியின் கோட்பாடுகளுக்கு ஏற்றவிதத்தில் வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு விளக்கமாகவே உள்ளது. எனவே, இதை வேதாகமம் போதிக்கும் சத்தியமாகக் கருதமுடியாது. மேலும், புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்ற விதமான மாற்றங்கள் பூமியில் ஏற்பட்டதிற்குக் காரணம், நோவாவின் காலத்தில் ஏற்பட்ட உலகளாவிய ஜலப்பிரளயமாகும். ஏனெனில், “ஒரு வருஷ காலத்திற்கு நீடித்த ஜலப்பிரளயமே, தற்கால ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ள புவியியல் மாற்றங்களுக்கும் உயிர்ச்சுவடுகளுக்கும் காரணமாயுள்ளது.”[43] எனவே, இதைக் கருத்திற் கொள்ளாமல், பூமியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான காரணத்தை விளக்குவதற்கு ஆதியாமம் முதலாம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்துவது வேதாகம சத்தியத்தையே தாறுமாறாக்கும் தவறான ஒரு செயலாகவே உள்ளது.

உண்மையில், “தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்புக்கும் அதன் பின்பான சிருஷ்டிப்புக்கும் இடையில் கால இடைவெளி இருக்கின்றது என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.”[44] ஏனெனில், யாத்திராகமம் 20:11 அறியத்தருவதுபோல, “தேவன் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் இவைகளில் உள்ள அனைத்தையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்துள்ளதினால்” ஆதியாகமம் முதல் அதிகாரம் முதல் வசனத்தில் “வானமும் பூமியும்” சிருஷ்டிக்கப்பட்ட முதல் நாளிலிருந்து ஆறாவது நாளில் மனிதன் சிருஷ்டிக்கப்படும் வரைக்கும் மொத்தமாக ஆறு நாட்களே ஆகியுள்ளன. இதனால், ஆதிகாகமம் 1:1-5 வரையுள்ள முதல் நாள் சிருஷ்டிப்பில் முதலிரு வசனங்களுக்கும் இடையில் நீண்டகால இடைவெளி இருக்கின்றது என்று கூறுவது, வேதத்தில் இல்லாத ஒன்றை அதற்குள் புகுத்தும் தவறான ஒரு செயலாகவே உள்ளது. ஏனெனில், “ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின்படி வானமும் பூமியும் ஆறு நாட்களுக்குள்ளேயே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. ஆனால் இடைவெளிக்கோட்பாடு, சிருஷ்டிப்பின் ஆறு நாட்களுக்கும் நீண்ட காலத்திற்கும் முன்பே வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டதாகக் கூறுவது மாபெரும் தவறாகவே உள்ளது.”[45]

[41] இவ்விரு தீர்க்கதரிசனப் பகுதிகளின் முழுமையான விளக்கத்தை அறிந்துகொள்வதற்கு “சாத்தானின் சூழ்ச்சியும் மனிதனின் வீழ்ச்சியும்” என்னும் கட்டுரையை பார்க்கவும்.

[42] H.Blocher, *In the Beginning: The Opening Chapters of Genesis*, p. 42; B.K.Waltke, *Creation and Chaos*, p. 24.

[43] W.E.Lammerts, *Scientific Studies in Special Creation*, p. 40.

[44] J.MacKeown, *Genesis: The Two Horizons Old Testament Commentary*, p. 20.

[45] W.E.Lammerts, *Scientific Studies in Special Creation*, p. 39.